கும்பகோணம் நகராட்சி 150வது ஆண்டு

2014ம் ஆண்டின் சிறந்த நகராட்சி – முதல் பரிசு

# கும்பகோணம் நகர்மன்றம்

## சாதாரணக் கூட்டம்

## நாள் : 30.01.2019

# 30.01.2019ம் தேதிய நகர்மன்ற சாதாரண கூட்ட பொருள்கள்

| வ.எண் | பொருள்கள் – சனவரி 2019 | தீர்மானம் எண் |
|---|---|---|
| 1. | இந்நகராட்சியில் 2018–19ம் ஆண்டு நடைபெறும் பணிகளுக்கு ஒப்பந்ததாரர்கள் மற்றும் விநியோகஸ்தர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்படும் வருமானவரி தொகைக்கும், இந்நகராட்சி பணியாளர்களிடம் பிடித்தம் செய்யப்படும் வருமானவரி தொகைக்கு அவ்வப்போது (TDS) E-Filling (INTEGRATED DATA MANAGEMENT SERVICE PRIVATE LIMITED) நிறுவனத்தின் மூலம் செய்வதற்கு 2018–2019ம் ஆண்டுக்கு உத்தேச செலவினமாக ரூ.35,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.247** அனுமதி வழங்கப்பட்டது. |
| 2. | இந்நகராட்சியில் வரியில்லா இனங்களுக்கு வசூலிக்கப்படும் சேவைவரிக்கு பதில் தற்போது சரக்கு மற்றும் சேவைவரி என்று மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதற்கேற்ப சரக்கு மற்றும் சேவைவரி தொகை பிடித்தம் செய்யப்பட்டு TDS செய்வதற்கு ஏதுவாக புதியதாக அரசு கணக்கில் Registration செய்து கணக்கு எண் வாங்கிடவும், காலாண்டுகளுக்கு ஒருமுறை பிடித்தம் செய்யப்படும் தொகைகளை S.R.ASSOCIATES பட்டய கணக்கர் மூலமாக TDS செய்வதற்கும், 2018–19ம் ஆண்டிற்கு உத்தேச செலவினம் ரூ.10,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.248** அனுமதி வழங்கப்பட்டது. |
| 3. | கும்பகோணம் நகராட்சி பராமரிப்பில் உள்ள ஓலைப்பட்டினம் வாய்க்கால் பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு ஏதுவாக JCB இயந்திரங்கள், பணியாளர்கள், வாகனங்கள், புகைப்படம் மற்றும் வீடியோ எடுக்கவும், பிரிண்ட் போடவும் மற்றும் ஆக்கிரமிப்பு அகற்றும் நகராட்சி பணியாளர்கள், ஊதிய பாதுகாப்பு பணிகளுக்கு காவல்துறையினர், மின்சார வாரிய பணியாளர்கள் ஆகியோருக்கு உணவு ஏற்பாடுகள் மற்றும் இதர செலவினமாக ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) உத்தேச செலவினமாக மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி ஒப்புதலுக்கு. | **தீர்மான எண்.249** அனுமதி வழங்கப்பட்டது. |
| 4. | இந்நகராட்சிக்கு சொந்தமான யானையடி துவக்கப்பள்ளி அரசாணை நிலை எண் 73 பள்ளிக் கல்வி (தொக.3(2)) துறை, நாள் 17.04.2018ல் "பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவுப் பள்ளி" என மாற்றம் செய்து நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்வு செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி பள்ளிக்கு புதிதாக சத்துணவுக் கூடம் அமைக்கும் பணியினை கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ள ரூ.9.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு | **தீர்மான எண்.250** அனுமதி வழங்கப்பட்டது. |
| 5. | இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு பராமரிப்பு வாகனம் TN.68.F.5739 வாகனத்தின் தகுதிச்சான்று பெறவேண்டிய காலம் நிறைவடையும் தருவாயில் உள்ளதால், அவ்வாகனத்தின் பழுதுகளை சரிசெய்து தகுதிசான்று பெறும் பணியை மேற்கொள்ளவும் அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.75000/– (ரூபாய் எழுபத்தைந்தாயிரம் மட்டும்) தனிஅலுவலரின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.251** அனுமதி அளிக்கப்பட்டது. |
| 6. | இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு பராமரிப்பு வாகனம் TN.68.Q.3708 வாகனத்தின் தகுதிச்சான்று காலம் நிறைவடையும் தருவாயில் உள்ளதால் அவ்வாகனத்தின் பழுதுகளை சரிசெய்து தகுதிசான்று பெறும் பொருட்டு அனுமதிக்காகவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.70,000/– (ரூபாய் எழுபத்தைந்தாயிரம் மட்டும்) தனி அலுவலரின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.252** அனுமதி அளிக்கப்பட்டது. |
| 7. | இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு பராமரிப்பு வாகனம் TN.68.F.3857 வாகனத்தின் தகுதிச்சான்று பெறவேண்டிய காலம் நிறைவடையும் தருவாயில் உள்ளதால், அவ்வாகனத்தின் பழுதுகளை சரிசெய்து தகுதிசான்று பெறும் பணியை மேற்கொள்ளவும் அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.70000/– (ரூபாய் எழுபதாயிரம் மட்டும்) தனிஅலுவலரின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.253** அனுமதி அளிக்கப்பட்டது. |
| 8. | இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு பராமரிப்பு வாகனம் TN.68.F.1698 வாகனத்திற்கு மின்கலம் (Battery) பழுதடைந்து இயக்க இயலாத நிலையில் உள்ளதால், அவ்வாகனத்திற்கான புதிய மின்கலம் வாங்கவும் அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.9000/– (ரூபாய் ஒன்பதாயிரம் மட்டும்) தனிஅலுவலரின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.254** அனுமதி அளிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 9. | இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு பொறியியல் பிரிவு, பொதுப்பிரிவு அலுவலக உதவியாளர்களுக்கான 2018–19ம் ஆண்டிற்கான சீருடை வழங்கும் பொருட்டு தீர்மான எண்.154 நாள்.27.9.2018ல் உத்தேச செலவினம் ரூ.4.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு கோ–ஆப்டெக்ஸ், தஞ்சாவூர் நிறுவனத்திடமிருந்து சீருடை வாங்கப்பட்டது. சீருடைகள் மற்றும் தையல் கூலிக்கான செலவினம் ரூ.426572/– நிர்வாக அனுமதியை விட கூடுதல் செலவினம் ரூ.26,572/–க்கு தனி அலுவலரின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.255**<br>அனுமதி அளிக்கப்பட்டது. |
| 10. | இந்நகராட்சிக்குட்பட்ட 45 வார்டுகளிலும் அம்ருத் திட்டத்தின் கீழ் புதிய பைட் லைனும், வாட்டர் மீட்டர் பொருத்தப்பட்டும், மேலும் புதிய இணைப்புகளும் வழங்கப்பட்டு வருகிறது. அவ்வாறு அம்ருத் திட்டத்தின் வழங்கப்பட்டும் புதிய மேற்பார்வைக்கட்டணமும், மதிப்பிட்டுக் கட்டணமும் உள்ளடங்கியதாகும். இத்திட்டத்தின் கீழ் மதிப்பீட்டுக்கட்டணம் மற்றும் மேற்பார்வைக்கட்டணம் உள்ளதால், புதிய குடிநீர் இணைப்புக்கு குடியிருப்புக்கு வைப்புத்தொகை ரூ.2000/–மும் வணிக குடியிருப்புக்கு ரூ.4000/–மும் செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | **தீர்மான எண்.256**<br>அனுமதி அளிக்கப்பட்டது. |
| 11. | கும்பகோணம் நகராட்சி பராமரிப்பின் கீழ் இயங்கி வரும், வலையப்பேட்டை நீரூந்து நிலையத்தில் நிறுவப்பட்ட 20 mld capacity உள்ள சோடியம் ஹைட்ரோ குளோரின் பிளாண்ட்–யை இயக்கி பராமரிக்கும் பணியானது, ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் M/s.ஆதவன் டிரேடர்ஸ், முத்தூர் (திருப்பூர் மாவட்டம்) நிறுவனத்தார் மூலம் 01.09.2017 முதல் ஓராண்டு காலத்திற்கு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்சமயம் ஒப்பந்தப்புள்ளிகள் நடைமுறைகள் முடிவடையாததால், மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மறுஉத்திரவு வழங்கும்வரை, தற்பொழுது இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியினை செய்வதுவரும் M/s.ஆதவன் டிரேடர்ஸ், முத்தூர் நிறுவனத்திற்கு அதே விலை விகிதத்தில் பராமரிப்பு பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது | **தீர்மான எண்.257**<br>அனுமதி அளிக்கப்பட்டது. |
| 12. | 15.11.2018 அன்று இரவு கடுமையாக வீசிய கஜாபுயலின் காரணமாக இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மொத்தம் 5510 எண்ணிக்கையிலான தெருவிளக்குகளில் கீழ்கண்டவாறு தெருவிளக்குகள், EB மீட்டர் பெட்டிகள் ஆகியவை முற்றிலும் சேதமாகியும், உடைந்தும், U.G கேபிள்கள் short ஆகி எரிந்தும் முற்றிலும் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் நகர் பகுதிகளில் தெருவிளக்கு பராமரிப்பில் மிகவும் தொய்வு நிலை ஏற்பட்டுள்ளது.<br>**சேதமடைந்த தெருவிளக்குகள் மற்றும் மின்சாதன பொருட்கள்**<br>1. 20W LED Fittings - 128 Nos<br>2. 40W LED Fittings - 25 Nos<br>3. 120W LED Fittings - 20 Nos<br>4. 150W LED Fittings - 20 Nos<br>5. 250W LED Fittings - 20 Nos<br>6. 400W MHL Fittings - 12 Nos<br>7. 3.5 core 25sqmm U.G aluminum Cable - 880 mts<br>8. EB Motor Box<br>எனவே மேற்கண்ட பழுதடைந்த பின் உபகரணங்களுக்கு புதியதாக கீழ்கண்ட பொருட்கள் வாங்கி பொருத்த வேண்டும்.<br>1. 20W LED Fittings - 128 Nos<br>2. 40W LED Fittings - 25 Nos<br>3. 90W LED Fittings - 60 Nos<br>4. 3.5 core 25sqmm U.G aluminum Cable - 880 mts<br>5. EB Motor Box - 320 Nos<br>இதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.32.00 இலட்சத்திற்கும் கஜா புயலின் நிவாரண நிதியை எதிர்நோக்கி கஜா புயலின் மறுசீரமைப்பு பணியின் அவசர அவசியம் கருதி, தற்பொழுது தெருவிளக்கு பராமரிப்பு பணி செய்துவரும் M/s.சபரி எலக்ட்ரிகல்ஸ், சென்னை நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கியதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | **தீர்மான எண்.258**<br>அனுமதி அளிக்கப்பட்டது. |
| 13. | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகள் முழுவதும் சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி, பாதாள சாக்கடை கட்டணம், வரியில்லா இனங்கள் தொகைகளை உடனடியாக செலுத்திட தெரிவித்து ஆட்டோ வாகனம் மூலம் ஒலிபெருக்கி வைத்து நாள் ஒன்றுக்கு வாடகை அடிப்படையில் விளம்பரம் செய்திட தனிஅலுவலர் | **தீர்மான எண்.259**<br>அனுமதி அளிக்கப்பட்டது. |

அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டதன் பேரில் விலைப்புள்ளிகள் 25.01.2019 அன்று தருவிக்கப்பட்டது. தருவிக்கப்பட்ட விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிதாரர்கள் விவரம் | நாள் ஒன்றுக்கு வாடகை அடிப்படையில் ரூ. |
|---|---|---|
| 1 | தென்றல் வர்த்தக விளம்பரம்<br>12பி, மந்திரி சந்து,<br>கும்பகோணம் | 1600/– |
| 2. | இதயம் வர்த்தக விளம்பரம்<br>10சி, அண்ணலக்ரஹாரம் | 1675/– |
| 3. | ஸ்ரீபாலாஜி அட்வர்டைசிங்<br>127, பழனிச்சாமி நகர் | 1700/– |

14.

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 1 முதல் 45 முடியவுள்ள தொகுதிகளில் சொத்துவரியினை அனைத்து வரிவிதிப்புதாரர்களுக்கும் (Residential Building, Rental Buildng, Non-Residential) அரசு ஆணை எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை, நாள்.19.7.2018 மற்றும் அரசு ஆணை எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை, நாள்.26.7.2018ன்படி 1.4.2018 முதல் சொத்துவரி பொதுவரி சீராய்வு செய்யப்பட்டுள்ளது. அதன் சிறப்பு அறிவிப்பு அனைத்து வரிவிதிப்புதாரர்களுக்கும் உடன் சார்வ் செய்யப்படவேண்டியுள்ளது. எனவே A4 size print out (PDF Format) எடுக்க தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டதின்பேரில் விலைப்புள்ளிகள் 25.01.2019 அன்று தருவிக்கப்பட்டது. தருவிக்கப்பட்ட விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் விவரம் | நகல் ஒன்றின் விவரம் | விலை ரூ. |
|---|---|---|---|
| 1 | Speed system & Xerox<br>9/3, Sarangapani Sannathi st,<br>Kumbakonam | A4 size printout (PDF Format) | 1.40 |
| 2. | Sai Sri Traders<br>18/3, Braman Koil Bazar St,<br>Kumbakonam | A4 size printout (PDF Format) | 1.80 |
| 3. | J Print Systems<br>18A Braman Koil Bazar st,<br>Kumbakoam | A4 size printout (PDF Format) | 1.60 |

**தீர்மான எண்.260**
அனுமதி அளிக்கப்பட்டது.

15.

இந்நகராட்சி வருவாய் நிதியின் கீழ் ஏ.ஆர்.ஆர். காலனி பொதுக் கழிவறை பராமரிப்பு செய்யும் ரூ.3.70 இலட்சம் மதிப்பீட்டிலான பணிக்கு 21.12.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டின் படி ஒப்பந்தத் தொகை ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீத விபரம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | என். சரவணன்,<br>ஒப்பந்ததாரர்,<br>கும்பகோணம் | 3,63,341.73 | 3,83,071.19 | மதிப்பீட்டை விட 5.43 சதவிகிதம் அதிகம் (GST உட்பட) |
| 2. | ஏ.பி. பில்டார்ஸ்,<br>ஒப்பந்ததாரர்,<br>கும்பகோணம் | 3,63,341.73 | 3,63,279.62 | மதிப்பீட்டை விட0.02 சதவிகிதம் குறைவு (GST உட்பட) |

**தீர்மான எண்.261**
அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.

<table>
<tr><td>16.</td><td>தூய்மை இந்தியா திட்டம் 2018–19ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக 1 எண்ணிக்கை 1000 லிட்டர் கொள்ளளவு மற்றும் 1 எண்ணிக்கை 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட கழிவு நீர் அகற்றும் வாகனங்கள் (Jetting Machines) சப்ளை செய்யும் பணிகளுக்கு 28.12.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரும் அறிவிக்கை ந.க.எண் 6614/2018/இ2 நாள் 10.12.2018–ஐ சென்னை செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர் அவர்களின் வெளியீட்டு ஆணை 5121/ஒப்பந்தப்புள்ளி/விளம்பரம்/2018 நாள் 10.12.2018 மூலம் சென்னை ENTHRALL COMMUNICATIONS PVT. LTD. நிறுவனத்தார் மூலம் மக்கள்குரல் மற்றும் டெக்கான் கிரானிக்கல் நாளிதழ்களில் 12.12.2018 அன்று விளம்பரம் செய்தமைக்கும் அதற்கான செலவினம் ரூ.68947/–ஐ வருவாய் நிதியிலிருந்து செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.</td><td>தீர்மான எண்.262<br>அனுமதி வழங்கப்பட்டது.</td></tr>
<tr><td>17.</td><td>மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க. எண் 10/செமதொஅ/2018 கடிதத்தின் பேரில் இந்நகராட்சியால் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் குறித்த அறிக்கையினை தின மலர் நாளிதழின் தொழில் மலரில் விளம்பரம் செய்தமைக்கும் அகற்கான செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு
<table>
<tr><td>வரிசை எண்</td><td>நாளிதழ்</td><td>மாவட்ட ஆட்சித் தலைவர் கடிதம்</td><td>தொழில் மலர் நாள் மற்றும் பட்டியல் விபரம்</td><td>பட்டியல் தொகை ரூ.</td></tr>
<tr><td>1</td><td>தின மலர்</td><td>ந.க. எண் 10/செமதொஅ/2018 நாள் 24.9.2018</td><td>தொழில் மலர் – 18.10.2018<br>Bill No. 286 dt.18.10.2018</td><td>14034</td></tr>
</table></td><td>தீர்மான எண்.263<br>அனுமதி வழங்கப்பட்டது.</td></tr>
<tr><td>18.</td><td>இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள "பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவு நடுநிலைப் பள்ளிக்கு (யானையடி பள்ளி) " புதிதாக சத்துணவுக் கூடம் அமைக்கும் ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டிலான பணிக்கு 21.1.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு
<table>
<tr><td>வ. எண்</td><td>ஒப்பந்ததாரர் பெயர்</td><td>மதிப்பீட்டின் படி ஒப்பந்தத் தொகை ரூ.</td><td>ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</td><td>சதவீத விபரம் ரூ.</td></tr>
<tr><td>1</td><td>திரு. வி. சிவக்குமார், ஒப்பந்ததாரர், கும்பகோணம்</td><td>924455.00</td><td>922762.25</td><td>மதிப்பீட்டை விட 0.18 சதவிகிதம் குறைவு (GST உட்பட)</td></tr>
<tr><td>2.</td><td>திரு. வி. ஞானபிரகாசம் ஒப்பந்ததாரர், கும்பகோணம்</td><td>924455.00</td><td>952933.16</td><td>மதிப்பீட்டை விட 3.08 சதவிகிதம் கூடுதல் (GST உட்பட)</td></tr>
</table></td><td>தீர்மான எண்.264<br>அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.</td></tr>
<tr><td>19.</td><td>இந்நகராட்சி காரனேசன் மருத்துவமனையில் உள்ள கணிணி வரிவசூல் மையத்தில் UPS-க்கான பழுதடைந்த 130AH–12 வோல்ட் பேட்டரி 1 எண்ணிக்கையை எடுத்துவிட்டு அதற்கு பதிலாக 130AH 12–வோல்ட் பேட்டரி1 எண்ணிக்கை புதியதாக விநியோகம் செய்தும், பொருத்தியும் கொடுக்கும் பணிக்கு ஆணையர் மற்றும் தனிஅலுவலரின் முன் அனுமதிபெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ.எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>விலைப்புள்ளித் தொகை</th></tr>
<tr><td>1</td><td>மெசர்ஸ். ராஜூ எலக்ட்ரிக்கல்ஸ், கும்பகோணம்</td><td>13650/–</td></tr>
<tr><td>2</td><td>மெசர்ஸ். பைவ் ஸ்டார் எலக்ட்ரிக்கல்ஸ், கும்பகோணம்</td><td>14500/</td></tr>
<tr><td>2</td><td>மெசர்ஸ். ராமுஎலக்ட்ரிக்கல்ஸ், கும்பகோணம்</td><td>14750/</td></tr>
</table></td><td>தீர்மான எண்.265<br>அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.</td></tr>
</table>

<table>
<tr>
<td>20.</td>
<td>இந்நகராட்சி பொதுப்பிரிவில் 5 கே.வி.ஏUPS க்கான பழுதடைந்த 28AH – 12 வோல்ட் பேட்டரிகள் 20 எண்ணிக்கையை எடுத்துவிட்டு அதற்கு பதிலாக 28AH – 12 வோல்ட் பேட்டரிகள் 20 எண்ணிக்கை புதியதாக விநியோகம் செய்தும், பொருத்தியும் கொடுக்கும் பணிக்கு ஆணையர் மற்றும் தனிஅலுவலரின் முன் அனுமதிபெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ.எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>விலைப்புள்ளித் தொகை</th></tr>
<tr><td>1</td><td>மெசர்ஸ். ராமுஎலக்ட்ரிக்கல்ஸ்,<br>கும்பகோணம்</td><td>77500/–</td></tr>
<tr><td>2</td><td>மெசர்ஸ். பைவ் ஸ்டார் எலக்ட்ரிக்கல்ஸ்,<br>கும்பகோணம்</td><td>80000/–</td></tr>
<tr><td>2</td><td>மெசர்ஸ். ராஜு எலக்ட்ரிக்கல்ஸ்,<br>கும்பகோணம்</td><td>75000/–</td></tr>
</table>
</td>
<td>தீர்மான எண்.266<br>அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>21.</td>
<td>கும்பகோணம் நகராட்சிக்கு எதிராக மற்றும் கும்பகோணம் நகராட்சியால் உள்ளூர் நீதிமன்றங்கள், மாவட்ட நீதிமன்றங்கள், சென்னை மற்றும் மதுரை உயர்நீதி மன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழங்குகள் நமது நகராட்சியின் பல பிரிவுகளில் நிலுவையிலும், முடிவுற்ற நிலையிலும் உள்ளன. மேற்படி அந்த வழக்குகளுக்கும், வழக்கறிஞர்களின் சட்டக்கருத்துரைகளுக்கும் நகர்மன்ற வழக்கறிஞர்கள் மற்றும் உயர்நீதி மன்ற வழக்கறிஞர்களுக்கும் வழக்கறிஞர் கட்டணம் வழங்க கோரி கடிதங்கள் மூலம் தெரிவித்துள்ளனர். எனவே இந்நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்குகள் மற்றும் நகராட்சியால் தொடரப்பட்ட வழக்குகளில் முடிவுற்ற வழக்குகள் மற்றும் நடைபெற்றுவரும் வழக்குகளுக்கும் சட்டக்கருத்துரைகளுக்கும் கொடுக்க வேண்டிய வழக்கறிஞர் கட்டணத்தை அவ்வப்போது வழங்கிட மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது. மேலும் இனிவரும் காலங்களில் நகராட்சிக்கு எதிராகவும், நகராட்சியால் தொடரப்படும் வழக்குகளுக்கு உரிய வழக்கறிஞர் கட்டணம் வழங்கவும், நீதிமன்றம் வழக்கு தொடர்பான பிற செலவினங்களுக்கும் மன்றத்தின் அனுமதி கோரலாம்.</td>
<td>தீர்மான எண்.267<br>அனுமதி வழங்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>22.</td>
<td>இந்நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை திட்டம் குப்பைகளை அகற்றும் தனியார் ஒப்பந்த அடிப்படையில் பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.46384/பி3/2012 நாள்.03.12.2013ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நகர்மன்ற தீர்மான எண்.513, நாள்.30.01.2014ல் அனுமதி பெறப்பட்டு வார்டு எண்.10 முதல் 32 முடிய 23 வார்டுகளில் மெஸர்ஸ். மதுரை மீனாட்சி சாலிட் வேஸ்ட் கிளியரிங் ஏஜென்ஸி, காரைக்குடி நிறுவனத்தால், பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முதல் மூன்றாண்டுகளுக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு (20.02.2014முதல் 19.02.2017 முடிய) மூன்றாண்டுகளுக்கு உத்திரவு வழங்கப்பட்டும், மேலும் ஓராண்டுகாலம் 20.02.2017 முதல் 19.02.2018 முடியவும் மற்றும் 20.02.2018 முதல் 19.02.2019 ஓராண்டு காலத்திற்கு பணிஉத்திரவு வழங்கி பணி நடைபெற்று வருகிறது. இந்நிலையில், பணி உத்திரவு வழங்கிய காலம் நிறைவடைவதால் தொடர்ந்து பணியினை மேற்கொள்ள உத்திரவு வழங்குவது தொடர்பாகவும், நகர்மன்ற தீர்மான எண்.221, நாள்.21.06.2017ல் அனுமதி பெறப்பட்டு 7,8 மற்றும் 9 ஆகிய மூன்று வார்டுகளும் 01.07.2017 முதல் துப்புரவு பணிமேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே 7 முதல் 32 முடிய உள்ள 26 வார்டுகளிலும் மெஸர்ஸ் மதுரை மெஸர்ஸ் ஏஜென்ஸி, காரைக்குடி நிறுவனத்தின் மூலம் இந்நகராட்சியின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.18469/2013/எச்.1, நாள்.19.02.2014ல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டும், மேலும் குப்பைகள் உருவாகும் இடத்திலேயே உரமாக்குதல் திட்டம் (Onsite comperte) மற்றும் MCC மையம் (Micro Compost Centre) மூலம் குப்பைகளை தரம் பிரித்து அனுப்புவது நடைமுறைப்படுத்தும் போது தனியார் ஒப்பந்தம் ரத்து செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும் நகர்மன்ற தீர்மான எண்.513, நாள்.30.04.2014ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் 20.02.2019 முதல் 19.08.2019 முடிய ஆறுமாத காலத்திற்கு 5ம் ஆண்டு விலைவிகிதத்திலேயே மேற்படி நிறுவனத்தின் பணி மேற்கொள்ளவும் அதற்குண்டான செலவினத்திற்காகவும் மன்ற பொருள் வைக்கப்படுகிறது.</td>
<td>தீர்மான எண்.268<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>23.</td>
<td>கும்பகோணம் நகராட்சி பராமரிப்பு கீழ் இயங்கிவரும் குடிதாங்கியில் உள்ள இரு தலைமை நீரேற்று நிலையங்கள், வலையப்பேட்டை நிருந்து நிலையம் மற்றும் 13 எண்ணம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் ஆகியவற்றை பராமரிப்பும் செய்யும் பணியானது ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் தனியார் மூலம் 01.08.2017 முதல் ஓராண்டு காலத்திற்கு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்சமயம் ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகள் முடிவடையாததால் மேற்படி மணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு மறு உத்திரவு வழங்கும்வரை திரு.சரவணன் ஒப்பந்ததாரருக்கு அதே விலை விகிதத்தில் பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.</td>
<td>தீர்மான எண்.269<br>அனுமதி அளிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>24.</td>
<td>இந்நகராட்சி பொதுசுகாதார வளாகத்தில் மின் வயரிங் மோட்டார் பம்ப்செட்டுகள் பழுது சீர்செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை 220000/– க்கு 9.01.2019–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.
<table>
<tr><th>வ.எண்</th><th>விலைப்புள்ளிவரப்பெற்ற நிறுவனத்தின் பெயர்</th><th>குறைவு / அதிகம்</th></tr>
<tr><td>1</td><td>மெசர்ஸ். திரு.என். சரவணன் B.E<br>ஒப்பந்ததாரர்,<br>ஆண்டியப்பப்பன் தெரு ,<br>கும்பகோணம்.</td><td>மதிப்பீட்டைவிட –0.40 சதவிகிதம் குறைவு</td></tr>
<tr><td>2</td><td>மெசர்ஸ். விஜயலெட்சுமிடிரேடர்ஸ்,<br>பழையஅரண்மனைத்தெரு,<br>கும்பகோணம்.</td><td>மதிப்பீட்டைவிட 0.30 சதவிகிதம் அதிகம்</td></tr>
</table></td>
<td>தீர்மான எண்.270<br>அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>25.</td>
<td>கும்பகோணம் நகராட்சியில் பணிபுரியும் நிரந்தரப் பணியாளர்கள் மற்றும் அலுவலர்களின் மாத ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள சேமநலநிதி தொகைக்கான கருவூல இருப்பிற்கு 2000–01ம் ஆண்டு முதல் 2017–2018ம் ஆண்டு வரையிலான காலத்திற்கு உள்ளாட்சி நிதித்தணிக்கை இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து வட்டி தொகை வழங்கிட வேண்டி திருத்திய வட்டி கணக்கீடு மற்றும் கருத்துரு தயார் செய்திடவும், 2009–10ம் நிதி ஆண்டு முதல் 2017–18ம் ஆண்டு வரையிலான காலத்திற்கு தனிநபர் சேமநிதி வட்டி கணக்கீட்டு பணியினையும் தனிநபர் மூலம் மேற்கொள்ள பின்வரும் விபரப்படியான உத்தேச செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.
<table>
<tr><td>1.</td><td>கருவூல இருப்பிற்கு வட்டித் தொகைக்கான கருத்துரு தயார் செய்திட 2000–01 முதல் 2017–18 வரை</td><td>–</td><td>ரூ.25,000/–</td></tr>
<tr><td>2.</td><td>தனிநபர் சேமநிதி வட்டித் தொகை கணக்கிட்டு பணிக்கான 2009–10 முதல் 2017–18 வரை</td><td>–</td><td>ரூ.10,000/–</td></tr>
<tr><td></td><td></td><td></td><td>ரூ.35,000/–</td></tr>
</table></td>
<td>தீர்மான எண்.271<br>அனுமதி வழங்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>26.</td>
<td>கும்பகோணம் நகர்மன்ற 30.01.2019–ந்தேதிய தீர்மான எண்.242–ல் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கப்பட்டுள்ள மகாமகக்குளம் மேல்கரையில் வாகனங்கள் நிறுத்தும் வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள பயணியர் விடுதி (Dormitory Building) கட்டிடத்தின் பராமரிப்பு பொறுப்புகளை ஏற்று கட்டிடத்திலுள்ள அறைகளை வாடகைக்கு விட்டு மற்றும் தரைத்தளத்தில் சிற்றுண்டி விடுதிக்கான கூடுதல் வசதிகளை சொந்த செலவில் மேற்கொண்டு சிற்றுண்டி விடுதி நடத்திக்கொள்ளும் உரிமத்திற்கு கீழ்கண்டவாறு சிறப்பு நிபந்தனைகளுடன் ஏலம் கோர மன்றத்தின் அனுமதிக்கு.<br><u>சிறப்பு நிபந்தனைகள்</u><br>1) அரசு அல்லது தனியார் தங்கும் விடுதியினை குறைந்தது மூன்றாண்டுகள் நடத்தி வருபவராகவோ/ நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும்.<br>2) நடத்தி வரும் தங்கும் விடுதி குறைந்தபட்சம் 20 அறைகள்/50 படுக்கைகள் கொண்டதாக இருக்க வேண்டும்.<br>3) ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ளும் நபர் /நிறுவனம் தங்கும் விடுதிக்கு டிசம்பர் 2018 வரை ஜி.எஸ்.டி.செலுத்தியவராக இருக்க வேண்டும்.</td>
<td>தீர்மான எண்.272<br>அனுமதி அளிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td>4) ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ளும் நபர்/நிறுவனம் குறைந்தது 10 நபர்களுக்கு இ.எஸ்.ஐ. மற்றும் இ.பி.எப். டிசம்பர் 2018 வரை செலுத்தியிருக்க வேண்டும்.<br>5) கடந்த மூன்று ஆண்டுகளுக்கு வருமானவரி செலுத்தி வருமான வரித்துறைக்கு அறிக்கை சமர்ப்பித்தவராக இருத்தல் வேண்டும். கடந்த மூன்று வருடங்களுக்கு லாப, நட்ட கணக்கு மற்றும் நிதி நிலை அறிக்கை ( Balance Sheet ) பட்டய கணக்காளரால் (Charted Accountant) சான்றொப்பம் இடப்பட்ட நகல் அளிக்க வேண்டும்.<br>6) கடந்த மூன்று வருடங்களில் சராசரியாக ஒரு வருடத்திற்கு ஒரு கோடிக்கு குறையாமல் விற்று முதல் ( Turn Over ) செய்யும் நபராகவோ/நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும்.</td><td></td></tr>
<tr><td>27.</td><td>இந்நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்கள் 31.03.2019 உடன் முடிவடைவதால் 01.04.2019 முதல் மூன்றாண்டுகளுக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர வேண்டியுள்ளதால் தினசரி நாளிதழில் பிரசுரம் செய்ய அனுமதியும் அதற்கான செலவு தொகை ரூ.1,00,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.</td><td>தீர்மான எண்.273<br>அனுமதி அளிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>28.</td><td>தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் தலைமையில் 19.12.2018 அன்று எட்டாவது மாநில உயர்மட்டக் குழுக் கூட்டம் நடைபெற்றதின் 11.01.2019ம் தேதிய நிகழ்ச்சி குறிப்பு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க. எண் 38987/2014/ப்பி1, நாள் 11.01.2019உடன் இணைத்து வரப்பெற்றுள்ளது. இக்கூட்ட நிகழ்ச்சி குறிப்பில் கீழ்க்கண்ட வாகனங்கள் புதிதாக வாங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
<table>
<tr><td rowspan="2">வ. எண்</td><td rowspan="2">பணியின் பெயர்</td><td rowspan="2">மொத்த திட்ட மதிப்பீடு ரூ. இலட்சத் தில்</td><td colspan="3">நிதி விபரம் ரூ. இலட்சத்தில்</td></tr>
<tr><td>SBM GOI SHARE 35%</td><td>SBM STATE SHARE 55%</td><td>ULB SHARE 10%</td></tr>
<tr><td>1</td><td>திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக 38 எண்ணிக்கைகள் பேட்டரியால் இயங்கும் புதிய வாகனங்கள் விநியோகம் செய்தல்</td><td>68.40</td><td>29.94</td><td>37.62</td><td>6.84</td></tr>
</table>
மேற்கண்ட பணியினை மேற்கொள்ளவும், அதற்காகும் நகராட்சி பங்குத் தொகை ரூ.6.84 இலட்சத்தினை செலுத்தவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.</td><td>தீர்மான எண்.274<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>29.</td><td>கும்பகோணம் நகராட்சி பகுதியில் அனுமதியற்ற மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்த அரசு ஆணை வெளியிடப்பட்டு பொதுமக்கள் அனுமதியற்ற மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்த 03.11.2018 வரை கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும் அனுமதியற்ற மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்துவது தொடர்பாக நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அறிவுரையின்படி பொதுமக்கள் அறியும் வண்ணம் விளம்பர பலகைகள் நகராட்சிப் பகுதியில் மொத்தம் உள்ள 29 எண்ணிக்கை அனுமதியற்ற மனைப்பிரிவுகளில் மற்றும் பொது இடங்களில் விளம்பர பலகைகள் வைக்க உத்தேச செலவினம் ரூ.30,000/–க்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு.</td><td>தீர்மான எண்.275<br>அனுமதி அளிக்கப்பட்டது.</td></tr>
</table>

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்**
**கும்பகோணம் நகர்மன்றம்**